IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1093/2025

Deposition of Witness PW1

Name : அன்பரசு Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர். .

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 29.03.2025 அன்று நிலைய குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக உதவி ஆய்வாளர் மாதேஸ்வரன், முதல் நிலை காவலர் மாதேஸ்வரன், ஆகியோருடன் நானும் ரோந்து அலுவலாக மணிக்கூண்டு, ஜின்னா வீதி,மோசிகர்னர் வீதி , ஆகிய இடங்களில் ரோந்து சென்று புது அக்ரஹார வீதியில் 12 மணியளவில் உள்ள ஒரு காலியிடத்தில் ஒரு நபர் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்தார். எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை நாங்கள் அவரைப் பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் திருநாவுக்கரசு என கூறி கஞ்சா வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார்.

அவரை சோதனை செய்வதற்கு நாங்கள் கேட்டபோது எங்களையே சோதனை செய்யுமாறு வேறு எங்கும் அழைத்துச் செல்ல வேண்டாம் என்று

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.02 19:24:45 +0530

கூறியதன் பேரில் நாங்கள் சோதனை செய்தோம். நாங்கள் கொண்டு சென்ற உபகரணங்களை வைத்து எதிரி வெள்ளை பாலிதீன்
கவரில் வைத்திருந்த பொருளை எடுத்து ஆஜர் செய்ததை எடை போட்டு பார்த்த போது 250 கிராம் இருந்தது. பிறகு எதிரி வைத்திருந்த கஞ்சாவை அங்கு இருந்த பொது ஜன சாட்சிகள் சரவணன் மற்றும் மற்றொருவர் முன்னிலையில் கைப்பற்றினோம். பின்னிட்டு எதிரியை கைது செய்து ,எதிரி மற்றும் வழக்குச் சொத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.77/2025, சட்டப்பிரிவு 8 (c) (b)(ii)(A) NDPS ACT வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் ஆஜர் எதிரியிடம் இருந்துதான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்து பணியில் ஈடுபடும் போது ஒரு இடத்தில் குற்றம் நடைபெற்றால் அது குறித்து பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரி மீது புகார் எதுவும் வரப்படவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்பே எங்கள் காவல் நிலையத்தில் எதிரி மீது வழக்கு உள்ளது. அன்றைய தினம் நாங்கள் பார்த்து எதிரியை சோதனை செய்தபோதுதான் கஞ்சா வைத்திருந்தது தெரியவந்தது.

சம்பவ இடத்தை சுற்றி கடைகள் அதிகம் உள்ளது என்றும், பொதுமக்கள் அதிகம் நடமாடிக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல அது காலியிடம். எனது மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க புள்ளி விவர பட்டியலுக்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.02 19:24:56 +0530

சரியல்ல.அதனால்தான் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக போடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.02 19:25:03 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1093/2025

Deposition of Witness PW2

Name : மாதேஷ்வரன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர். .

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2025 அன்று காலை 11:00 மணிக்கு நிலைய உதவி ஆய்வாளர் மாதேஸ்வரன் மற்றும் முதல் நிலை காவலர் அன்பரசு ஆகியோருடன் நானும் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக தகுந்த உபகரணங்களுடன் நேதாஜி ரோடு, மணிக்கூண்டு, ஜின்னா வீதி ஆகிய இடங்களில் ரோந்து மேற்கொண்டும் மதியம் 12 மணிக்கு ஈரோடு புது அக்ரஹார வீதி தபால் நிலையம் அருகில் உள்ள காலி இடத்தில் கண்காணித்துக் கொண்டிருந்தபோது அங்கு சந்தேகப்படும்படியாக நின்றிருந்த வாலிபரை பிடித்து விசாரித்த போது தனது பெயர் திருநாவுக்கரசு என்றும், தான் கஞ்சா என்னும் போதை பொருளை விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் கூறிய வரை 12.15 மணிக்கு 35(3) BNSS அழைப்பாணை சார்வு செய்த போது எதிரி வாங்க மறுத்துவிட்டார்.

பின்பு 12.20 மணிக்கு உச்சநீதிமன்ற நெறிமுறைகளை பின்பற்றி

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.02 19:25:13 +0530

அவரை கைது செய்தும், பின்பு இசைவு கடிதம் தயார் செய்து அதை சோதனை செய்ய முற்பட்டபோது அவர் தாங்களே சோதனை செய்யலாம் என அனுமதி கொடுத்து அவர் வைத்திருந்த கஞ்சாவை அவரது முழு சம்மதத்தின் பேரில் எடுத்து நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்த போது 270 கிராம் கஞ்சா இருந்தது. மேலும் அங்கிருந்த பொது ஜன சாட்சிகளான மாரியப்பன் மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் மதியம் 12.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தும், அதில் சாட்சிகள் மற்றும் எதிரி ஆகியோரின் கையொப்பம் பெற்றும் மதியம் 13 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.77/2025, சட்டப்பிரிவு 123 BNS மற்றும் 8 (c) (b)(ii)(A) NDPS ACT வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் ஆஜர் எதிரியிடம் இருந்துதான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்து பணியில் ஈடுபடும் போது ஒரு இடத்தில் குற்றம் நடைபெற்றால் அது குறித்து பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரி மீது புகார் எதுவும் வரப்படவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்பே எங்கள் காவல் நிலையத்தில் எதிரி மீது வழக்கு உள்ளது. அன்றைய தினம் நாங்கள் பார்த்த எதிரியை சோதனை செய்தபோதுதான் கஞ்சா வைத்திருந்தது தெரியவந்தது.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.02 19:25:20 +0530

சம்பவ இடத்தை சுற்றி கடைகள் அதிகம் உள்ளது என்றும், பொதுமக்கள் அதிகம் நடமாடிக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல அது காலியிடம். எனது மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க புள்ளி விவர பட்டியலுக்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.அதனால்தான் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக போடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.02 19:25:25 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1093/2025

Deposition of Witness PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரியப்பன் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர். .

**முதல் விசாரணை**

நான் ஈரோடு காரவாய்க்கால் பெரியார் வீதியில் வசித்து வந்து சலவைத் தொழில் செய்து வருகிறேன். 29.03.2025 மதியம் 12.30 மணியளவில் நானும் எனது நண்பர் சரவணன் என்றாலும் எங்களது சொந்த வேலையாக வெளியில் சென்று விட்டு புது வீதி தபால் நிலையம் அருகே வந்தபோது போலீசார் இருவர் ஒரு நபரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். என்னவென்று கேட்ட போது கஞ்சா வைத்திருந்ததாக போலீசார் சொன்னார்கள். அப்போது எடை போட்டு பார்த்தார்கள். நாங்கள் அங்கு ஓரமாக நின்று கொண்டிருந்தோம். கஞ்சாவின் எடை 270 கிராம் இருந்ததாக சொன்னார்கள்.

அன்றைய தினம் எதிரி விசாரித்த நபர் ஆஜர் எதிரியைப் போல் தான் தெரிகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் சோதனை இசைவு கடிதம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **சோதனை இசைவு கடிதம் மற்றும்**

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.02 19:25:34 +0530

**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கஞ்சாவைதான் அன்றைய தினம் போலீசார் எடைபோட்டு பார்த்தார்கள். **இந்த புகைப்படம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய கோரியதன் அடிப்படையில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

சம்பவ தினத்தன்று ஆஜர் எதிரி தான் கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்ததாக போலீசாரின் விசாரணையில் சொன்னார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் எதிரியை எங்கள் முன்னிலையில் சோதனை செய்வதற்காக எதிரி என் ஒப்புதல் பெற்று, பின்னிட்டு எதிரியிடமிருந்து கஞ்சாவை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. போலீசார் இது சம்பந்தமாக எங்களை விசாரித்தார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பரிந்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் கேட்டுக் கொண்டதின் பெயரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தப்பட்ட நபரையோ வழக்கு சொத்தையோ என்னிடம் காட்டவில்லை என்றால் அந்த இடத்தில் கஞ்சா இருந்தது.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.02 19:25:43 +0530